### 93வது பிறந்தநாள்: இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின்

# உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர் முரசொலி மாறன்!

## சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக.19 –

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்தநாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர் முரசொலி மாறன் அவர்கள் என்று புகழாரம் சூட்டினார்.

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாகவும் கழகத்தலைவர் அவர்களின் அன்புக்குரியவராகவும் திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் மறைந்த திரு.முரசொலி மாறன் அவர்களின் பிறந்த நாள் இன்று!**

**கழகத்தின் வளர்ச்சிக்காகவும் – திராவிட இயக்கக் கொள்கைகள் திக்கெட்டும் பரவிடவும் அயராது உழைத்தவர்.**



**இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர்.**

**திரு.முரசொலி மாறன் அவர்களின் பணிகளை இந்நாளில் நினைவுகூர்வோம்.**

**அவர் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் சந்தித்து தந்தை பெரியார் நடத்திய 'குடிஅரசு' இதழ் தொகுப்பு (1925 – 1949. 43 தொகுதி, 19 ஆயிரம் பக்கம்) நூலின் வெளியீட்டு விழாவிற்கு அழைப்பு விடுத்தார். உடன் சென்னை மாவட்டத் தலைவர் ஜனா விஜய், சென்னை மாவட்டச் செயலாளர் குமரன், 'பெரியார் பாதை' ஆசிரியர் கருமலையப்பன், மண்டலப் பொறுப்பாளர் பொள்ளாச்சி பிரகாஷ், ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேச்சை அதிக முறை நீக்கியது இதுவே முதல் முறை!

# சட்டப்பேரவையில் மரபை மீறிப் பேசிய அமைச்சர்களின் பேச்சுகள் நீக்கம்!

## சபாநாயகர் உத்தரவை மீறி ஆளுங்கட்சியினர் பேச முயற்சி!

சென்னை, ஆக. 19 –

சட்டப்பேரவையில், மரபுகளை மீறி பேசிய ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்ட 3 அமைச்சர்களின் பேச்சுக்களை சபாநாயகர் நீக்கம் செய்து உத்தரவிட்ட நிலையில், அவரது உத்தரவை மீறியும் அமைச்சர்கள் பேச முயற்சித்தது அவையில் சலசலப்பை ஏற்படுத்தியது.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு உரிய பதிலை சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அளிக்காமல், துறைக்கு சம்பந்தமே இல்லாத அமைச்சர்கள் ஏதேதோ பேசி வருகின்றனர். அவையின் மாண்பைச் சீர்குலைக்கும் வகையில் த.வெ.க. அமைச்சர்கள் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் பேசி வருவதும், அதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததும், சபாநாயகர் கண்டிக்கும் நிகழ்வுகளும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், இன்று சட்டப்பேரவையில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார், மற்றும் ரஞ்சித் ஆகியோர், அவையின் மாண்பை கெடுக்கும் வகையில் பேசியதை, சபாநாயகர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி உத்தரவிட்டார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்றில், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் பேச்சை அதிக முறை நீக்கி உத்தரவிட்டிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் – மருந்துகளை

# ஒழுங்குபடுத்தும் கொள்கைகளை செயல்படுத்த வேண்டும்!

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.19 -

ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் மருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைகளை செயல்படுத்த வேண்டும் என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஷ்குமார் வலியுறுத்தினார்.



டெல்லியில் நடைபெற்ற பாராளுமன்ற மாநிலங்களவை மழைக்கால கூட்டத் தொடர் கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு நேரத்தில் பேசியதாவது:-

ஆன்லைன் மருந்து விற்பனை வணிக இணையதளங்களால் மருந்துச்சீட்டு இல்லாமல் ஒழுங்குபடுத்தப்படாத இணையவழி மருந்து விற்பனை ஆகும். ஆன்லைன் மருந்தகங்கள் பாதுகாப்பான இணையவழி மருந்து விற்பனையை உறுதி செய்வதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு தேவை.

கோவிட்-19 பெருந்தொற்றின் போது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீதான நமது சார்பு நிலை அதிகரித்தது, மேலும் இந்தப் போக்கு தொடர்கிறது. இருப்பினும், இது பொது சுகாதாரத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் சரிபார்க்கப்படாத இணையவழி மருந்து விற்பனையானது லட்சக்கணக்கான உயிர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

மேலும், மக்கள் மருந்துகளை வாங்குவதற்கு சரிபார்க்கப்படாத இணையவழித் தகவல்களை நம்புவது, இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது. முறையான மருந்துச்சீட்டுகள் இருந்தாலும், உள்கட்டமைப்பு மற்றும் கொள்கைகள் இல்லாததால் இணையவழி மருந்துகளைச் சரிபார்க்க முடிவதில்லை.

எனவே, இந்தப் பிரச்சினையை முழுமையாக ஆராய்ந்து, ஆன்லைன் மருந்தகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைகளைச் செயல்படுத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூடுதலாக, மின்னணு மருந்துச்சீட்டு சேவைகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பை நிறுவுவதும், ஆன்லைன்மருந்தகங்களின் முறையான செயல்பாட்டை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை இயற்றுவதும் மிக அவசியமாகிறது. நாம் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்து, ஒழுங்குபடுத்தப்படாத இணையவழி மருந்து விற்பனையால் ஏற்படக்கூடிய தீங்குகளைத் தடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### கோவை தனியார் கல்லூரி மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி கேட்டு

# ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கள்ளக்குறிச்சி, ஆக.19 -

கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் படித்த கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பகுதியை சேர்ந்த மாணவர் அமுதன் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி விசாரணை கோரியும், போதைப் பொருட்களை தடுக்க தவறிய தவெக அரசை கண்டித்தும் ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளின் சார்பில் கள்ளக்குறிச்சி கச்சேரி சாலை பகுதியில், தெற்கு மாவட்ட செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க. கார்த்திகேயன் தலைமையில் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ. ஜி.ஆர். வசந்தவேல் ஆகியோர் முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், நீதி வேண்டும், நீதி வேண்டும் மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி வேண்டும், கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம் போதை பொருட்களை தடுக்கத் தவறிய காவல் துறையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நீதி எங்கே, நீதி எங்கே அமுதன் படுகொலைக்கு நீதி எங்கே, தமிழக அரசே தவெக அரசே மாணவன் அமுதன் படு கொலையை கோஷ்டி பூசலாக மாற்றாதே, சட்டம் ஒழுங்கு சீர்குலைத்து தமிழ்நாட்டை கொலை, கொள்ளை மாநிலமாக மாற்றிய தவெக அரசை கண்டிக்கிறோம் என பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, மாநில நிர்வாகி பெருநற்கில்லி, தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ராமமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் கருணாகரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது அலி, தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பிரபு, பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வாணியந்தல் ஆறுமுகம், புவனேஸ்வரி பெருமாள், திருநாவுக்கரசு, தெற்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் இளங்கோவன், ஒன்றிய செயலாளர்கள் சத்தியமூர்த்தி, அன்புமணி மாறன், அரவிந்தன், நெடுஞ்செழியன், கனகராஜ், அண்ணாதுரை, பெருமாள், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, ராஜவேல், முருகன், வைத்திய நாதன், சந்திரசேகரன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள், தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் நல்லதம்பி உள்பட தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் முடிவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட துணை செயலாளர் காமராஜ் நன்றி கூறினார்.


முதல் ஆண்டு நினைவஞ்சலி



ரேணுகா தேவி பாலு

1946 - 2025

ஒரு ஆண்டு கடந்தாலும்,
உங்கள் அன்பும் பாசமும் நினைவுகளும்
எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும்

டி.ஆர். பாலு, MP
Dr. டி.ஆர்.பி. ராஜா
செல்வகுமார் பாலு